# முல்லைத்தீவு கல்வி வலயம்
## கணக்கீடு
## தரம் 12
## பகுதி 11

Qu 01

அஸ்வினி கம்பனியின் 2020 மார்ச் மாதம் முடிவடைந்த காலாண்டுக்கான கொடுக்கல் வாங்கல் பற்றிய விபரம் வருமாறு

1. காசுப் பெறுவனவு நாளேட்டின் சுருக்கம் வருமாறு.

| | |
|---|---|
| காசு விற்பனைகள் | 2,800,000 |
| கடன்பட்டோரிடம் பெற்றது | 865,000 |
| ஏனைய வருமானங்கள் | 210,000 |
| ஏனைய பெறுவனவுகள் | 175,000 |
| | 4,050,000 |

2. மேலதிகத் தகவல்கள் வருமாறு

- மொத்த விற்பனைகளில் 70% காசு விற்பனைகளாகும்.
- இக்காலப்பகுதியில் விற்பனை செய்யப்பட்ட பொருட்களில் ரூபா 120,000 கிரயமான பொருட்கள் வாடிக்கையாளரால் திருப்பி அனுப்பப்பட்டன.
- காலாண்டினுள் கடன்பட்டோர் பெறுமதியான ரூபா 25,000 அறவிடமுடியா நட்டக் கடனாக பதிவழிக்கப்பட்டது.
- நிறுவனத்தின கொள்கை கிரயத்துடன் 20% இலாபம் சேர்த்து பொருட்களை விற்பனை செய்வதாகும்.
- 01.01.2020 இல் கடன்பட்டோர் கட்டுப்பாட்டுக் கணக்கு மீதி ரூபா 225,000 ஆக காணப்பட்டது.
- வியாபார வருமதிகளில் 10% இனை ஐயக்கடனாக ஏற்பாடு செய்தல் வேண்டும்.

3. 31.03.2020 இல் முடிவடைந்த காலாண்டு காலப்பகுதியில் கடன்பட்டோர் பேரேட்டிலிருந்து பிரித்தெடுக்கப்பட்ட மொத்த மீதி ரூபா 260,800 ஆகக் காணப்பட்டது இம் மீதி கடன்பட்டோர் கட்டுப்பாட்டுக் கணக்கு மீதியுடன் இணங்கவில்லை. வேறுபாட்டிற்கான காரணங்கள் கணக்காய்வாளரினால் கண்டுபிடிக்கப்பட்டது.

- கடன்பட்டோர் பேரேட்டுக் கணக்கிலுள்ள ரூபா 25,000 பெறுமதியான வரவு மீதியொன்று செலவு மீதியாக பட்டியலிடப்பட்டிருந்தது.
- கடன்கொடுத்தோர் பேரேட்டிலிருந்து ரூபா 72,500 ஐ கடன்பட்டோர் பேரேட்டிற்கு மாற்றியது தொடர்பாக கடன்பட்டோர் கட்டுப்பாட்டுக் கணக்கில் எவ்வித பதிவுகளும் மேற்கொள்ளப்படட்டிருக்கவில்லை.
- 31.03.2020 இல் கடன்பட்டோர் ஒருவரின் ரூபா 7,200 மீதியானது அறவிடமுடியா நட்டக் கடனாக பதிவழிக்கப்பட்டது ஆனால் இது தொடர்பாக கடன்பட்டோர் கட்டுப்பாட்டுக் கணக்கில் எவ்வித பதிவுகளும் மேற்கொள்ளப்படட்டிருக்கவில்லை.
- விற்பனைத் திரும்பல் நாளேட்டின் மீதியானது ரூபா 22,500 இனால் குறைத்துக் கூட்டப்பட்டிருந்தது.
- கடன்பட்டோர் மீதிகள் பட்டோலையிலிருந்து வரவு மீதியொன்றான ரூபா 11,500 உம் செலவு மீதியொன்றான ரூபா 8,500 உம் தவறிவிடப்பட்டிருந்தது.
- கடன்பட்டோர் ஒருவரின் நேரடி வைப்பான ரூபா 9,800 தொடர்பாக ஏடுகளில் எப்பதிவும் இடம்பெறவில்லை.

வேண்டப்படுவது

1. 31.03.2020 இல் முடிவடைந்த காலாண்டிற்கான திருத்தமுன் கடன்பட்டோர் கட்டுப்பாட்டுக் கணக்கு?
2. திருத்திய கடன்பட்டோர் கட்டுப்பாட்டுக் கணக்கு?
3. கடன்பட்டோர் கட்டுப்பாட்டுக் கணக்கு மீதிகளுடன் பட்டியல் மீதியினை இணக்கம் செய்யும் கூற்று?

Qu 02.

சுகிர்தா கம்பனியின் 2020 ஜனவரி மாதத்திற்கான காசுப் பெறுவனவு , காசுக் கொடுப்பனவு தொடர்பான விபரங்கள் வருமாறு

- காசுப் பெறுவனவுகள்

| | "000" |
|---|---|
| காசு விற்பனைகள் | 750 |
| கடன்பட்டோரிடம் பெற்றது | 2,150 |
| ஏனைய வருமானங்கள் | 435 |
| ஏனைய பெறுவனவுகள் | 200 |
| | 3,535 |

- காசுக் கொடுப்பனவுகள்

| | "000" |
|---|---|
| காசுக் கொள்வனவு | 300 |
| கடன்கொடுத்தோருக்குச் செலுத்தியது | 1,950 |
| ஏனைய செலவுகள் | 425 |
| ஏனைய கொடுப்பனவுகள் | 100 |
| | 2,775 |

- 2019 ஜனவரி மாதத்திற்கான வங்கிக் கணக்கிணக்கக் கூற்றின் சுருக்கம் வருமாறு

| | "000" |
|---|---|
| திருத்திய காசுக் கட்டுபாட்டு மீதி | 175 |
| (+) சமர்ப்பிக்கப்படாத காசோலைகள் | 400 |
| (-) வசூலிக்கப்படாத காசோலைகள் | (300) |
| | 275 |

- 2020 ஜனவரி மாதத்திற்கான வங்கிக் கூற்றின் சுருக்கம் வருமாறு

| | செலவு | வரவு | மீதி |
|---|---|---|---|
| 01.01.2020 இல் வங்கிக் கூற்று மீதி | | | 275,000 |
| வசூலிக்கப்பட்டவை | | 3,475,000 | 3,750,000 |
| சமர்ப்பிக்கப்பட்டவை | 2,830,000 | | 920,000 |
| வங்கிக்கட்டணம் | 75,000 | | 845,000 |
| நேரடி வைப்பு | | 600,000 | 1,445,000 |
| காசோலைப் புத்தகக் கட்டணம் | 35,000 | | 1,410,000 |
| பங்குலாபம் | | 80,000 | 1,490,000 |

- 01.01.2020, 31.01.2020 இல் பின்வரும் மீதிகள் காணப்பட்டது

| விபரம் | 31.01.2020 | 01.01.2020 |
|---|---|---|
| இருப்புக்கள் | 125,000 | 175,000 |
| வியாபார வருமதி | 210,000 | 315,000 |
| வியாபார சென்மதி | 175,000 | 240,000 |
| அட்டுறுச் செலவு | 35,000 | 40,000 |
| வருமதி வருமானம் | 60,000 | 75,000 |

வேண்டப்படுவது

1. 2020 ஜனவரி மாதத்திற்கான திருத்திய காசுக் கட்டுப்பாட்டுக் கணக்கு?
2. 2020 ஜனவரி மாதத்திற்கான வங்கிக் கணக்கிணக்கக் கூற்று?
3. 31.01.2020 இல் தேறிய இலாபத்தினைக் கணிக்கும் கூற்று?

Qu 03.

சாரங்கன் கம்பனியின் கணக்குப்பதிவாளரினால் 2019.12.31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான பரீட்சைமீதி சமப்படவில்லை. அதற்கேற்ப வித்தியாசத்தைத் தொங்கல் கணக்கில் பதிவு செய்து பரீட்சை மீதி சமப்படுத்தப்பட்டு இறுதிக்கணக்குகள் தயாரிக்கப்பட்டது. பின்னர் கம்பனியின் கணக்காய்வாளரினால் பின்வரும் வழுக்கள் கண்டுபிடிக்கப்பட்டன.

- விற்பனைத் திரும்பல் ரூபா 1,500 கட்டுப்பாட்டுக் கணக்கில் சரியாகப்பதிவு செய்யப்பட்ட போதிலும் உட்திரும்பல் கணக்கில் பதியப்படவில்லை.
- கொடுத்த கழிவு ரூபா 5,000 கடன்பட்டோர் கட்டுப்பாட்டுக் கணக்கில் சரியாகப்பதிவு செய்யப்பட்ட போதிலும் கொடுத்த கழிவுக் கணக்கில் ரூபா 500 எனப் பதியப்பட்டிருந்தது.
- கொள்வனவுக் குறிப்பேடானது ரூபா 3,000 இனால் குறைத்துக் கூட்டப்பட்டிருந்தது.
- இயந்திரப் பழுதுபாரத்தல் செலவு ரூபா 2,500 இயந்திரக் கணக்கில் பதியப்பட்டிருந்தது.
- வங்கிக்கட்டணம் ரூபா 1,250 செலவுக் கணக்கில் சரியாகப்பதிவு செய்யப்பட்ட போதிலும் காசுக் கட்டுப்பாட்டுக் கணக்கில் பதியப்படவில்லை.
- ஆண்டு காலத்தில் மோட்டார் வாகனம் ஒன்று ரூபா 165,000 இற்கு விற்கப்பட்டது. அதன் ஆரம்பக்கிரயம் ரூபா 355,000 ஆக இருந்தது. அதன் தேறிய ஏட்டுப் பெறுமானம் ரூபா 225,000 ஆக இருந்தது. ஆனால் விற்பனை மூலம் பெற்ற காசு, காசுக் கணக்கில் மட்டும் பதியப்பட்டிருந்தது.
- கொடுத்த வாடகை ரூபா 24,000 பெற்ற வாடகையாகக் கருதி பதியப்பட்டது. ஆனால் காசுக் கணக்கில் சரியாகப்பதிவு செய்யப்பட்டுள்ளது.
- விற்பனை நாளேடு 85,000 ரூபாவினால் குறைத்துக் கூட்டப்பட்டிருந்தது.

வேண்டப்படுவது

1. வழுக்களை திருத்துவதற்கான நாட்குறிப்புப் பதிவினைத் தருக?
2. தொங்கல் கணக்கினைத் தயாரிக்குக?
3. தேறிய இலாபச் சீராக்கக் கூற்றினைத் தயாரிக்குக? இவ் வழுக்கள் சீராக்கப்பட முன் வரைபு வருமானக் கூற்றின் படி தேறிய இலாபம் ரூபா 275,500 ஆகக் காணப்பட்டது.

Qu 04.

மாதுரி விளையாட்டுக் கழகத்தின் கணக்குப்பதிவாளரினால் பின்வரும் தகவல்கள் சமர்ப்பிக்கப்பட்டது.

சொத்துக்கள் பொறுப்புக்கள் தொடர்பான தகவல்கள்

| | 31.03.2019 | 31.03.2020 |
|---|---|---|
| காணி கட்டடம் | 450,000 | 438,000 |
| விளையாட்டு உபகரணம் (தேறியது) | 24,000 | 28,500 |
| தளபாடம் | 43,000 | 30,500 |
| முதலீடுகள் | 150,000 | 220,000 |
| பெறவேண்டிய சந்தா | 12,000 | 14,000 |
| காசு மீதி | 41,000 | 105,850 |
| முற்பணச் சந்தா | 3,500 | 5,500 |
| அட்டுறு கணக்குப்பதிவாளர் சம்பளம் | 2,000 | 3,000 |
| சிற்றுண்டிச்சாலை உணவு வழங்குநர் | 72,400 | 64,300 |
| அட்டுறு சிற்றுண்டிச்சாலை செலவு | - | 1,360 |
| திரண்ட நிதி | 642,100 | ? |

2. 31.03.2020 இல் பெறுவனவு கொடுப்பனவு கணக்கின் சுருக்கம்

| பெறுவனவு | தொகை | கொடுப்பனவு | தொகை |
|---|---|---|---|
| 01.04.2019 இல் மீதி | 41,000 | கணக்குப்பதிவாளர் சம்பளம் | 25,000 |
| சந்தா | 114,000 | மைதான திருத்தம் | 8,700 |
| நன்கொடை | 25,000 | பத்திரிகை கொள்வனவு | 12,500 |
| நுழைவுக்கட்டணம் | 14,800 | தளபாடம் கொள்வனவு | 10,000 |
| பத்திரிகை விற்பனை வருமானம் | 1,500 | சிற்றுண்டிச்சாலைக்கான சம்பளம் | 73,400 |
| சிற்றுண்டிச்சாலை வருமானம் | 395,500 | சிற்றுண்டிச்சாலை உணவு வழங்குனர் கொடுப்பனவு | 276,500 |
| ஏனைய வருமானம் | 3,400 | விளையாட்டு உபகரணம் | 11,000 |
| | | தொலைபேசி மின்சாரம் | 2,750 |
| | | எழுதுகருவி காகிதாதி | 5,450 |
| | | முதலீடு கொள்வனவு | 50,000 |
| | | சிற்றுண்டிச்சாலை செலவு | 6,500 |
| | | ஏனைய செலவு | 7,550 |
| | | மீ/செ | 105,850 |
| | 595,200 | | 545,200 |
| மீ/வ | 105,850 | | |

3. மேலதிக தகவல்கள்

- 31.03.2019 பெறவேண்டிய சந்தா விபரம்
  31.03.2018 இற்கு ரூபா 7500

31.03.2019 இற்கு ரூபா 4500

இதில் 31.03.2018 இற்கான சந்தா 31.03.2020 இல் பதிவழிக்கப்பட தீர்மானிக்கப்பட்டுள்ளது.

- இவ் வருடத்தில் விளையாட்டு அரங்க அபிவிருத்தி நிதியத்திற்கு ரூபா 34,500 ஒதுக்கீடு செய்ய தீர்மானிக்கப்பட்டுள்ளது.
- கழகத்தின் காணி கட்டடத்தில் 1/4 பகுதி சிற்றுண்டிச்சாலைக்குரியதாகும். அத்துடன் தளபாடத்தில் 1/2 பகுதி சிற்றுண்டிச்சாலையினால் பயன்படுத்தப்பட்டு வருகின்றது.

வேண்டப்படுவது:-

1. 31.03.2020 இற்கான வருமானச் செலவுக் கணக்கு?
2. சிற்றுண்டிச்சாலை வருமானத்தினைக் கணிக்குக?
3. 31.03.2020 இல் நிதி நிலைமைக் கூற்று?

**Qu. 05)**

2020 ஜனவரி மாதத்தில் சுரேகா வியாபார நிலையத்தில் இடம்பெற்ற கொடுக்கல்வாங்கல்களின் விளைவாக தயாரிக்கப்பட்ட பரீட்சைமீதி சமப்படாததன் காரணமாக தொங்கல் கணக்கு உருவாக்கப்பட்டு வரைபு வருமானக்கூற்று தயாரிக்கப்பட்டது. ஜனவரி மாதத்திற்கான வரைபு இலாபமாக ரூ. 285000 கணிப்பிடப்பட்டது. பின்னர் பின்வரும் வழுக்கள் கண்டுபிடிக்கப்பட்டது.

1. தளபாடக்கொள்வனவு ரூ. 25000 க்கு மேற்கொள்ளப்பட்டது தொடர்பாக காசுக்கணக்கில் மட்டும் பதிவிடப்பட்டீருந்தது.
2. கடன்பட்டோரிடமிருந்து பெற்ற காசு ரூ.65000 காசுக்கணக்கில் சரியாயப்பதியப்பட்ட போதிலும் கடன்பட்டோர் கட்டுப்பாட்டுக்கணக்கில் வரவுப்பக்கத்தில் பதியப்பட்டிருந்தது.
3. உரிமையாளர் தனது சொந்தப்பணத்திலிருந்து கடன்கொடுத்தோருக்கு 10 கழிவு பெற்று செலுத்திய ரூ. 18000 தொடர்பாக ஏடுகளில் எப்பதிவும் இடம்பெறவில்லை.
4. ரூ.40000 கிரயமான சரக்குகள் தீயால் அழிவடைந்தது. இதில் 65 ஐ காப்புறுதிக் கம்பனி தரவதாக ஒப்புக்கொண்டிருந்தது. இது முற்றிலும் அழிவாகப் பதியப்பட்டீருந்தது.
5. ரூ. 25000 கிரயமான பண்டங்கள் வாடிக்கையாளரினால் திருப்பியனுப்பப்பட்டது தொடர்பாக ஏடுகளில் எப்பதிவும் இடம்பெறவில்லை. நிறுவனம் 15 இலாபத்துடன் பொருட்களை விற்பனை செய்கின்றது.
6. 2020 மார்ச் 31 இல் முடிவடையும் காலாண்டிற்காக வாடகையாக ரூ.45000 செலுத்தப்பட்டது. இது முற்றிலும் வருமானத்திற்கெதிராகப் பதிவழிக்கப்பட்டுள்ளது.
7. ஜனவரி மாதத்திற்கான முதலீட்டு வருமானம் ரூ. 25000 காசாகப் பெற்றபோதிலும் இது காசுக்கணக்கில் மாத்திரம் பதியப்பட்டிருந்தது.
8. ஜனவரிமாத வங்கிக் கடன் தவணைக்கட்டணமாக ரூ. 12000 வட்டி உட்பட ரூ. 60000 செலுத்தப்பட்டிருந்தது. ஆனால் அத்தொகை முழுவதும் வங்கிக்கடன் செலுத்துகையாகப் பதிவிடப்பட்டுள்ளது.
9. விற்பனை நாளேடானது ரூ. 90000 ஆல் அதிகரித்துக் கூட்டப்பட்டிருந்தது.
10. மாத இறுதியிலுள்ள கடன்பட்டோரில் 20 இனை வியாபார எதிர்பார்க்கை நட்டத்திற்கான ஏற்பாடாகச் செய்யப்படுதல் வேண்டும் இது முன்னைய மீதிக் ஏற்கனவே சீராக்கப்பட்டிருந்தது. (திருத்த முன்னரான மீதிக்கு)

வேண்டப்படுவது.

❖ மேற்காட்டிய வழுக்களை பின்வரும் கணக்கீட்டுச் சமன்பாட்டினூடாகத் திருத்தம் செய்க?

| இல | ஆதனம் பொறி உபகரணம் | இருப்பு | வியாபார வருமதி | ஏனைய வருமதி | காசு | உரிமம் | தேறிய இலாபம் | தொங்கல் கணக்கு | பொறுப்பு |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| மீதி | 450000 | 150000 | 240000 | 10000 | 305000 | 565000 | 285000 | 175000 | 130000 |

2. வழுக்களைத் திருத்திய பின்னர் சீராக்கப்பட்ட வருமானக்கூற்றைத் தயாரிக்குக?
3. 31.01.2020 இல் வழுக்களைத் திருத்திய பின்னர் தேறிய சொத்தில் ஏற்பட்ட அதிகரிப்பு யாது?

**Qu. 06)**

விக்னேஸ் வணிகத்தின் 31.03.2020 இல் முடிவடைந்த வருடத்திற்காகத் தயாரிக்கப்பட்ட காசுப் பெறுவனவு மற்றும் காசுக்கொடுப்பனவு நாளேடுகள் வருமாறு.

காசுப்பெறுவனவு நாளேடு

| விபரம் | கழிவு | மொத்தம் | காசு விற்பனை | கடன்பட்டோரிடம் பெற்ற காசு | ஏனைய வருமானம் | ஏனைய பெறுவனவுகள் |
|---|---|---|---|---|---|---|
| காசு விற்பனை | | 160000 | 160000 | | | |
| கடன்பட்டோர் கலா | 2000 | 78000 | | 78000 | | |
| மேலதிக மூலதனம் | | 100000 | | | | 100000 |
| பங்குலாபம் | | 15000 | | | 15000 | |
| மோட்டார்விற்பனை | | 35000 | | | | 35000 |
| வஙடகிக்கடன் பெற்றது | | 100000 | | | | 100000 |
| கடன்பட்டோர் நிலா | 5000 | 60000 | | 60000 | | |
| **மொத்தம்** | **7000** | **548000** | **160000** | **138000** | **15000** | **235000** |

காசுக்கொடுப்பனவு நாளேடு

31.01.2019 , 31.03.2020 ஆகிய திகதிகளில் காணப்பட்ட சொத்து பொறுப்பு ஆகிய மீதிகள் வருமாறு.

| விபரம் | 31.01.2019 | 31.03.2020 |
|---|---|---|
| காசுக்கட்டுப்பாட்டக் கணக்கு | 245000 | ? |
| கடன்பட்டோர் கட்டுப்பாட்டுக் கணக்கு | 165000 | 232500 |
| கடன்கொடுத்தோர் கட்டுப்பாட்டுக் கணக்கு | 108150 | 225600 |
| தளபாடங்கள் | 215000 | 243500 |
| காணிகட்டடம் | 750000 | 730000 |
| மோட்டார் வாகனம் | 250000 | 175000 |
| இருப்பு | 65300 | 75250 |
| வங்கிக் கடன் | 372500 | ? |
| மூலதனம் | 1192150 | ? |
| அட்டுறுச்செலவு காப்புறுதி | 17500 | 25400 |

மேலதிக தகவல்கள் வருமாறு.

1. நிலையான சொத்துக்கள் தேறிய ஏட்டுப்பெறுமதியில் காட்டப்பட்டள்ளன.
2. இம்மாதத்தில் இடம்பெற்ற கடன்விற்பனைகளில் ரூ. 54000 விற்பனை விலையுள்ள இருப்புக்கள் வாடிக்கையாளினால் வகை வேறுபாடு காரணமாகத் திருப்பி அனுப்பப்பட்டுள்ளது.
3. ரூ. 50000 தேறிய ஏட்டுப் பெறுமதியைக் கொண்ட மோட்டார் வாகனங்கள் விற்பனை

| விபரம் | கழிவு | மொத்தம் | காசுக்கொள் வனவு | கடன்கொடுத்தோருக்கு கொடுத்த காசு | ஏனைய செலவுகள் | ஏனைய கொடுப்பனவுகள் |
|---|---|---|---|---|---|---|
| கடன்கொடுத்தோர் கரன் | 7000 | 93000 | | 93000 | | |
| காசுக்கொள்வனவு | | 60000 | 60000 | | | |
| தளபாடக்கொள் வனவு | | 50000 | | | | 50000 |
| சம்பளம் | | 15000 | | | 15000 | |
| காப்புறுதி | | 18000 | | | 18000 | |
| வங்கிக்கடன் தவணைக்கட்டணம் | | 20000 | | | | 20000 |
| | | 256000 | 60000 | 93000 | 33000 | 70000 |

செய்யப்பட்டுள்ளன.

4. பின்வரும் விடயங்கள் தவறவிடப்பட்டமை வங்கிக்கூற்றுக் கிடைத்ததன் பின்னர் தெரியவந்தது.

கடன்பட்டோர் நேரடிவைப்பு ரூ. 65000

வங்கி அறவிட்ட வங்கிக் கட்டணம் ரூ. 2500

நிலையானகட்டளையின் பெயரிலான வாடகைக் கொடுப்பனவு ரூ. 19500

பின்வருவனவற்றைத் தயாரிக்குமாறு வேண்டப்படுவது.

1. காசுக்கட்டுப்பாட்டக் கணக்கு, கடன்பட்டோர் கட்டுப்பாட்டுக் கணக்கு, கடன்கொடுத்தோர் கட்டுப்பாட்டுக் கணக்கு உட்பட ஏனைய பேரேட்டுக்கணக்குகள்
2. 31.03.2020 இல் முடிவடைந்த ஆண்டுக்கான வருமானக் கூற்று.
3. 31.03.2020 இல் உள்ளவாறான நிதிநிலைமைக் கூற்று.